**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 25/2024**
**Prosecution Witness :1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ஜாக்குலின் கிருஷ்டி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | ஆரோக்கியதாஸ் | **Calling** | : | **நகைக்கடையில் வேலை** |
| **Village** | : | **சிறுநாயக்கன்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **39** |
| | | | **Dated** | : | **28.01.2026.** |

**28.01.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி1– திருமதி. **ஜாக்குலின் கிருஷ்டி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1, 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் சிறுநாயக்கன் பட்யில் குடியிருந்து நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 27.08.2023 தேதி நான் எனது மகள் டீனா சந்தோசினி, எனது மகன் டால்வின் ஆகாஷ் எனது அம்மா நிர்மலா ரோசி, எனது மாமா பொன்னுசாமி ஆகியோர் ராஜேந்திர தியேட்டருக்கு படம் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். படம் பார்த்துவிட்டு நானும் எனது

மகளும் TN37BK9537 Scooty Pep இருசக்கர வாகனத்தில் வந்தோம். இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டினேன். எனது அம்மா எனது மகன், பொன்னுசாமி ஆகியோர் பொன்னுசாமியின் TN57AJ4465 Splender இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். நாங்கள் அனைவரும் சாப்பிடுவதற்கு அஞ்சலி ரவுண்டானவிற்கு வந்து கொண்டிருந்தோம். R.M காலனி மயானத்திற்கு எதிரே நானும் எனது மகளும் இருசக்கர வாகனத்தில் கிழகிருந்து மேற்கு நோக்கி வந்து கொ'ண்டிருந்தோம். பொன்னுசாமி எனது அம்மா மற்றும் மகனுடன் எனக்கு முன்னால் சுமார் 50 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது சுமார் 6 மணியிருக்கும் எனக்கு பின்னால் இருந்து கருப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனத்தில் 2 சுமார் 23 லிருந்து 24 வயது பசங்கள் 2 பேர் வந்தார்கள். இருசக்கர வாகனத்திதி ஓட்டி வந்த நபர் வெள்ளை கலர் ஹெல்மெட் போட்டிருந்தார். பின்னால் அமர்திருந்த நபர் பிரைஎன் கலர் சட்டை அணிந்திருந்தார். பின்னால் அமர்ந்திருந்த நபர் நான் அணிந்திருந்த 3 பவுன் செயினை பறித்துக்கொண்டு, கிழக்கிருந்து மேற்கு நோக்கி வேகமாக சென்றார்கள். நானும் அவர்களை பிடிக்க முயற்சி செய்தேன். எனக்கு முன்னால் சென்ற பொன்னுசாமியும் அவர்களை பிடிக்க முயற்சி செய்தார். பிடிக்கமுடியவில்லை. சுமார் 8.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் செயினை பறித்த நபரை நான் சம்பவத்தின்போதே பார்த்தேன் , அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. சம்பவத்தின் போது ஹெல்மெட் அணிந்து இருசக்கரவாகனத்தை ஓட்டிய நபரை போலிசார் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினார்கள். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. போலிசார் நகை கிடைத்துவிட்டதாக கூறி 2 பவுன் கட்டியாக காவல் நிலையத்தில் வைத்து காட்டினார்கள். அப்போது தான் மற்றொரு நபரையும் காட்டினார்கள். அதை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தங்க கட்டியைத்தான் நான் நீதிமன்றத்திலிருந்து பெற்று கொண்டேன். புகைப்படத்திலுள்ள தங்ககட்டி அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படதிலுள்ள

இருசக்கர வாகனத்தில் தான் எதிரிகள் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். போலிசார் வழக்கு சம்மந்தாமாக என்னை இரண்டு தடைவை விசாரித்தார்கள். பட்டியில் சாட்சி 2,3, 4 ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். நான் 3 வருடமாக நகைக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். திருடு போன நகையின் வகை மற்றும் மாடல் குறித்து புகார், போலிசார் விசாரணை, மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன். நான் முதல் விசாரனையில் சொன்னவாறு ராஜேந்திரா தியேட்டரில் படம் பார்த்து விட்டு நான் டு வீலரில் வந்த போது பல்சர் வந்த எதிரிகள் 23, 24 வயதுடையவர்கள் செயினை பறித்தார்கள் என்றும், எனது மாமா எனக்கு முன்பாக 50 மீட்டர் தொலைவில் சென்றார் என்றும், எதிரிகள் கிழகிலிருந்து மேற்கு நோக்கி தப்பி சென்றார்கள் என்றும் அவர்களை நானும் பிடிக்க முயற்சி செய்தேன் என்று குறிப்பிட்டுள்ள சங்கதிகளை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்ததால் அவரது வயதை கணிக்க முடியாது என்றால் சரிதான். புகார் மற்றும் போலிசார் விசாரணையில் செயினை பறித்த நபரின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செயின் என்னுடையது தான் என்பதற்கு ஆதரவாக பில் ரசீது களை அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் செல்லமுடியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து 2 மணி நேரம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் துரத்தி சென்றேன். எதிரிகளை நான் மற்றும் எனது மாமா எவ்வளவு தூரம் துரத்தி சென்றோம் என புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை போலிசார் காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு வைக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த சமயத்தில் வாகனத்தின் பதிவு எண் தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரனையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.28 14:52:03 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 25/2024**

**Prosecution Witness :2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : நிர்மலா ரோசி | **Caste** | : |
| **Husband's Name** | : குணசேகரன் | **Calling** | : **இல்லத்தரசி** |
| **Village** | : **சிறுநாயக்கன்பட்டி** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **64** |
| | | **Dated** | : **28.01.2026.** |

**28.01.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி2– திருமதி. நிர்மலா ரோசி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1, 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் சிறுநாயக்கன் பட்டியில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். கடந்த 27.08.2023 தேதி நான் எனது பேத்தி டீனா சந்தோசினி, எனது பேரன் டால்வின் ஆகாஷ் எனது மகள் ஜாக்குலின், பொன்னுசாமி ஆகியோர் ராஜேந்திர தியேட்டருக்கு

படம் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். படம் பார்த்துவிட்டு எனது மகளும் பேத்தி டீனா சந்தோசினியும் TN37BK9537 Scooty Pep இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். இருசக்கர வாகனத்தை எனது மகள் தான் ஓட்டினார். நான் எனது பேரன், பொன்னுசாமி ஆகியோர் பொன்னுசாமியின் TN57AJ4465 Splender இருசக்கர வாகனத்தில் வந்தோம். நாங்கள் அனைவரும் சாப்பிடுவதற்கு அஞ்சலி ரவுண்டானவிற்கு வந்து கொண்டிருந்தோம். R.M காலணி மயானத்திற்கு எதிரே நானும் எனது பேரனும், பொன்னுசாமியும் இருசக்கர வாகனத்தில் கிழகிருந்து மேற்கு நோக்கி வந்து கொ்ண்டிருந்தோம். பொன்னுசாமியும் நாங்களும் அவர்களுக்கு முன்னால் சுமார் 50 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தார். சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த எனது மகள் கத்தினாள். உடனே பொன்னுசாமி இருசக்கர வாகனத்தை நிறுத்தி எங்களை இறக்கிவிட்டார். பின்னர் எனது மகளிடம் செயினை பரித்தவர்களை இருசக்கரவாகத்தில் துரத்தி சென்றார். இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபரை மட்டும் நான் பார்த்தேன். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் ஹெல்மெட் அணிந்திருந்தார். பின்னர் போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்ட்படும் புகைப்படத்திலுள்ள இருசக்கரவாகத்தில் தான் எதிரிகள் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் வண்டியில் முன்னே சென்று கொண்டிருந்தபோது என் மகளின் சத்தம் கேட்டுதான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். செயினை பறித்ததை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை அடையாளம் தெரியும் என்பதை போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ,சா.1 எனது மகள் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.28 14:52:12 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 25/2024**

**Prosecution Witness :3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பொன்னுசாமி | **Caste** | : | |
| **Father's Name** | : | முருகன் | **Calling** | : | **தனியார் வேலை** |
| **Village** | : | **சிறுநாயக்கன்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **28.01.2026.** |

**28.01.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி3– திரு. பொன்னுசாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1, 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் சிறுநாயக்கன் பட்யில் குடியிருந்து தனியார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர். கடந்த 27.08.2023 தேதி நான் அ.சா.1 மகள் டீனா சந்தோசினி, அ.சா.1 மகன் டால்வின் ஆகாஷ், அ,சா.1 ஜாக்குலின், அ.சா.2 ஆகியோர் ராஜேந்திர தியேட்டருக்கு படம்

பார்ப்பதற்காக சென்றிருந்தோம். படம் பார்த்துவிட்டு அ,சா.1 அவரது மகள் டீனா சந்தோசினியும் TN37BK9537 Scooty Pep இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். இருசக்கர வாகனத்தை அ,சா.1 ஓட்டினார். நான் அ,சா.2, அ,சா.1 மகன் டால்வின் ஆகாஷ் ஆகியோர் எனது TN57AJ4465 Splender இருசக்கர வாகனத்தில் வந்தோம். நாங்கள் அனைவரும் சாப்பிடுவதற்கு அஞ்சலி ரவுண்டானவிற்கு வந்து கொண்டிருந்தோம். R.M காலனி மயானத்திற்கு எதிரே நாங்கள் இருசக்கர வாகனத்தில் கிழகிருந்து மேற்கு நோக்கி வந்து கொ'ண்டிருந்தோம். நான் அ,சா.1 வந்த இருசக்கரவாகனத்திற்கு முன்னால் சுமார் 50 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது பின்னால் வந்த அ.சா.1 கத்தினார். உடனே என் இருசக்கர வாகனத்தை நிறுத்தி பின்னால் திரும்பி பார்த்தேன். அப்போது 2 நபர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில்என்னை கடந்து சென்றார்கள். அதில் பின்னால் இருந்த நபர் பிரௌன் கலர் சட்டை அணிந்திருந்தார். அவர் அ.சா.1 னிடம் பறித்த செயினை கையில் வைத்திருந்தார். பின்னர் அ.சா.1 யிடம் செயினை பரித்தவர்களை இருசக்கரவாகத்தில் நான் துரத்தி சென்றேன். இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபரை மட்டும் நான் பார்த்தேன். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் ஹெல்மெட் அணிந்திருந்தார். பின்னர் போலிசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டபடும் புகைப்படத்திலுள்ள இருசக்கரவாகத்தில் தான் எதிரிகள் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்திற்குள் சென்றுவிடலாம் என்றால் சரிதான். அ.சா.1 புகார் கொடுக்க சென்ற போது நானும் உடன் சென்றேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து 2 மணி நேரம் கழித்து புகார் கொடுத்தோம் என்றால் இல்லை. காவல் நிலையம் சென்று விட்டு அங்கிருந்து தேட சென்றோம்.

நான் வண்டியில் முன்னே சென்று கொண்டிருந்தபோது அ.சா.1 ன் சத்தம் கேட்டுதான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். அ.சா.1 சம்பவம் குறித்து என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஆமாம். போலிசார்

விசாரணையில் பின்னால் அமர்ந்த நபர் செயினை பறித்த நபர் செயினை பறித்துக் கொண்டு என்னை பார்த்துக் கொண்டே சென்றார் என் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளின் அங்க அடையாளங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. செயினை பறித்ததை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ,சா.1 எனது உறவினர் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.28 14:52:20 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 25/2024**

**Prosecution Witness :4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சீனிவாசன் | **Caste** | : |
| **Father's Name** | : முருகன் | **Calling** | : நகைக்கடையில் வேலை |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 23 |
| | | **Dated** | : 28.01.2026. |

**28.01.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி4– திரு. சீனிவாசன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**1, 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**</u>

1. நான் திண்டுக்கல் RMTC காலனியில் குடியிருந்து நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 27.08.2023 ம் தேதி இரவு சுமார் 9.00 மணிக்கு நானும் கார்த்தி என்பவரும் வேலை

முடித்துவிட்டு MVM காலேஜ்லிருந்து காட்டாஸ்பத்திரி நோக்கி வந்து கொண்டிருந்தோம். அப்போது R.M காலனி மின் மயானம் அருகே போலிசார் அங்கு நடந்த செயின் பறிப்பு சம்மந்தமாக போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். வரைபடம் வரைந்து எழுதி எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சின்னச்சாமி நகைக்கடையில் பணிபுரிந்து வருகிறேன், மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கடைவீதியில் உள்ளது. எனது வீடு நத்தம் ரோடு RMTC காலனியில் உள்ளது. பட்டியல் சாட்சி 5 கார்த்திக் என்னுடன் பணிபுரிபவர் என்றால் சரிதான். அவருடைய வீடு மேட்டுபட்டியில் உள்ளது என்றால் சரிதான். நான் 4 வருடமாக மேற்படி கடையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ முன்னதாக தெரியாது. எங்களுடைய வீட்டிற்கு செல்ல காட்டாஸ்பத்திரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வழியாக செல்ல அவசியம் இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரரில் இருந்த முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரனையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது தெரிந்த நபர் என்பதாலும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.28 14:52:27 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 25/2024**

**Prosecution Witness :5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கார்த்திக் | **Caste** | : | |
| **Father's Name** | : | முருகன் | **Calling** | : | நகைக்கடையில் வேலை |
| **Village** | : | திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **29** |
| | | | **Dated** | : | **28.01.2026.** |

**28.01.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி5– திரு. கார்த்திக் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1, 2 ஆம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் மேட்டுப்பட்டியில் குடியிருந்து நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 27.08.2023 ம் தேதி இரவு சுமார் 9.00 மணிக்கு நானும் சீனிவாசன்

என்பவரும் வேலை முடித்துவிட்டு MVM காலேஜ்லிருந்து காட்டாஸ்பத்திரி நோக்கி வந்து கொண்டிருந்தோம். அப்போது R.M காலனி மின் மயானம் அருகே போலிசார் அங்கு நடந்த செயின் பறிப்பு சம்மந்தமாக போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். வரைபடம் வரைந்து எழுதி எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சின்னச்சாமி நகைக்கடையில் பணிபுரிந்து வருகிறேன், மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கடைவீதியில் உள்ளது. அ.சா.4 என்னுடன் பணிபுரிவர் என்றால் சரிதான். அவருடைய வீடு நத்தம் ரோடு RMTC காலனியில் உள்ளது. என்னுடைய வீடு மேட்டுபட்டியில் உள்ளது என்றால் சரிதான். நான் 3 வருடமாக மேற்படி கடையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ முன்னதாக தெரியாது. எங்களுடைய வீட்டிற்கு செல்ல காட்டாஸ்பத்திரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வழியாக செல்ல அவசியம் இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரரில் இருந்த முழு விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரனையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது தெரிந்த நபர் என்பதாலும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.28 14:52:33 +0530

Judicial Magistrate No.I

Dindigul.